வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 28.11.2024 வியாழக்கிழமை | இதழ் : 332 | பக்கங்கள் : 12

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி!

## உறவுகள் திரண்டு நினைவு கூர்ந்தனர்

**யாழ்ப்பாணம், நவம்பர் 28**

**வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லத்திலும் கிளி நொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் 11



# யாழில் மழை வெள்ளத்தால் 43ஆயிரத்து 682பேர் பாதிப்பு!

## 129 வீடுகள் பகுதியளவில் சேதம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 12,970 குடும்பங்களைச் சேர்ந்த 43ஆயிரத்து 682பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 129 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மூன்று வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. அத்துடன் 5 உட்கட்டமைப்புகள் முழுமையாகவும், 4 உட்கட்டமைப்புகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. அத்துடன் அனர்த்தத்தால் ஒருவர் காயமடைந்துள்ளார். 66 பாதுகாப்பு முகாம்களில் ஆயிரத்து 634 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 11

# ஏ-9 வீதி வெள்ளத்தில்!

வவுனியா, நவ. 28

ஓமந்தையில் ஏ-9 யாழ்.-கொழும்பு பிரதான வீதி நேற்று வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் மாற்று பாதைகளை பயன்படுத்துமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வாகனச் சாரதிகள், கெப்பிற்றிக்கொலாவ, வெலி ஓயா, முல்லைத்தீவு, பரந்தன் ஊடாக மாற்றுப் பாதைகளில் அல்லது மதவாச்சி, செட்டிக்குளம் மற்றும் மன்னார் ஊடாக யாழ்ப்பாணத்தை அடையுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம்-கொழும்பு பிரதான வீதியின் புத்தளம் பிரதேசத்தில் நேற்றுக் காலை பாரிய மரம் ஒன்று வீழ்ந்தது.

இதனால் குறித்த வீதியின் போக்குவரத்து நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டன. (அ)

# கைதடியில் ஆலய பூசகரை கட்டி வைத்துக் கொள்ளை!

## கைதடியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 28

ஆலய பூசகரை கட்டி வைத்து கூரிய ஆயுதங்களால் தாக்கி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் பணத்தினையும் கொள்ளை இட்டுச் சென்ற சம்பவம் ஒன்று கைதடியில் இடம்பெற்றுள்ளது.

கைதடி ஏ-9 வீதியில் அமைந்துள்ள கௌரி 11

# உயர்தரப் பரீட்சை குறித்து 29ஆம் திகதிக்கு பின் முடிவு

கொழும்பு, நவ. 28

சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள உயர்தரப் பரீட்சையை மீள நடத்துவது குறித்து நாளை 29ஆம் திகதிக்கு பின்னர் தீர்மானிக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 29ஆம் திகதிக்கு பின்னர் வானிலை நிலைமைகளை மீள்பகுப்பாய்வு செய்து 11

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயமாக நீக்கப்படும்

## உறுதி கூறுகிறார் ரில்வின் சில்வா

கொழும்பு, நவ. 28

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்ற உறுதிமொழி தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் நிறைவேற்றப்படும் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அத்துடன் புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனவும் அவர் கூறினார்.

"நாட்டில் முக்கிய சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தேவைப்படுகின்றது. எனவே, அடுத்த ஆண்டு அந்த முறைமை நீக்கப்படமாட்டாது. 11



# கஜேந்திரகுமாருடன் பொலிஸார் முறுகல்

## கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில்

அம்பாறை, நவ. 28

கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்துக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் நேற்று பொலிஸார் முரண்பட்டதுடன் பதற்ற நிலையும் ஏற்பட்டது.

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் 11

# மக்களுக்கு உதவி வழங்க தேவையான நிதி ஒதுக்கீடு

## ஜனாதிபதி அநுர அறிவிப்பு

கொழும்பு, நவ. 28

தொழில்நுட்ப தகவல்களை மாத்திரம் அடிப்படையாக கொண்டுச் செயற்படாமல் அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ள பிரதேசங்களுக்குச் சென்று தகவல்களை பெற்றுக்கொண்டு, மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்

அர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் அரச அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார இதனைத் தெரிவித்தார். 11

# சீரற்ற காலநிலையால் நான்கு பேர் உயிரிழப்பு

## 230,000 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

கொழும்பு, நவ. 28

நாட்டில் தொடரும் மோசமான வானிலை காரணமாக இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளதுடன், 06 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த மோசமான காலநிலை காரணமாக நாட்டின் 18 மாவட்டங்களில் உள்ள 141 பிராந்திய செயலகங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் உதய ஹேரத் குறிப்பிட்டார்.

குறித்த பகுதிகளில் 66,947 குடும்பங்களைச் சேர்ந்த 230,743 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# யாழ். பல்கலையிலும் மாவீரர் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தின் ஏற்பாட்டில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வானது பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவேந்தல் தூபியில் நேற்று நடைபெற்றது. 11

# பொருளாதார சீர்திருத்தத்தில் முன்னேறியுள்ளது இலங்கை!

கொழும்பு, நவ. 28

கடன் மறுசீரமைப்பில் வெற்றியை அடைவதற்கான இலங்கையின் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா, பொருளாதார சீர்திருத்த திட்டத்தில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தையும் பாராட்டியுள்ளார்.

இலங்கைக்கும் அதன் வெளிநாட்டுப் பத்திரதாரர்களுக்கும், உள்ளூர் கடனாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கின்றன என்று ஜோர்ஜிவா கூறினார்.

இந்த ஒப்பந்தங்கள் நாணய நிதியத்தின் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களுக்கு தாயகத்தில் உணர்வுபூர்வ அஞ்சலி




முள்ளியவளை - முல்லை


யாழ்.பல்கலைக்கழகம்



சாட்டி - யாழ்ப்பாணம்


ஆட்காட்டிவெளி - மன்னார்



கனகபுரம் - கிளிநொச்சி


ஆலங்குளம் - முல்லை



கோப்பாய் - யாழ்ப்பாணம்


முழங்காவில் - கிளிநொச்சி


வாகரை - மட்டக்களப்பு



ஈச்சங்குளம் - முல்லைத்தீவு



மாவடிமுன்மாரி - மட்டக்களப்பு



அளம்பில் - முல்லைத்தீவு



கொடிகாமம் - யாழ்ப்பாணம்



கஞ்சிகுடிச்சாறு - அம்பாறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.11.2024 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அழுத்தங்களற்ற அரசாங்கம்

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் அரசு கட்சியுடன் பேசுவதற்கு தயார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருகின்றார். அதற்கு நிபந்தனையாக தமிழ் மக்கள் பேரவையின் தீர்வாலோசனைத் திட்டத்தை முன்வைத்திருக்கின்றார். அந்தத் தீர்வாலோசனையில் இலங்கை தமிழ் அரசு கட்சி பங்குகொள்ளவில்லை என்பது வேறுவிடயம். இதே வேளை, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்திருக்கின்றார். ஆனால் இவர்கள் கவனிக்க வேண்டிய விடயம் வேறு - அதாவது, அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பில் எந்த அழுத்தங்களும் இல்லை - இருக்கப் போவதுமில்லை. இந்தப் பின்புலத்தில், தேசிய இனப்பிரச்னை பற்றிப் பேசுவதும், அதன் எல்லை என்ன என்பதை தீர்மானிக்கும் ஏகபோக உரிமை அரசாங்கத்திற்கு மாறியிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்பார்த்ததோ - எதிர்பார்க்கவில்லையோ அவர்கள் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மையை பெற்றிருக்கின்றனர். இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் அரிதான ஒன்றாகும். இவ்வாறானதொரு பின்னணியில் பலமான நிலையிலிருக்கும் அரசாங்கத்தை தேவையில்லாமல் விரோதித்துக் கொள்ள எந்தவொரு வெளித்தரப்பும் முற்சிக்காது - அதேவேளை தமிழரின் அரசியல் விவகாரம் ஏற்கனவே நீர்த்துப் போய்விட்ட ஒன்று.

இந்தியா மட்டும்தான் அரசியலமைப்பின் பதின் மூன்றாவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசிவருகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அங்கமாக பதின்மூன்று இருப்பதுதான் அதற்கான ஒரேயொரு காரணம். இல்லாவிட்டால் இந்தியாவும் ஈழத் தமிழர் பிரச்னையை ஒரு விடயமாக எடுப்பதை கைவிட்டிருக்கும். ஏனெனில் ஈழத்தமிழ் மக்களை அணுகக் கூடிய அரசியல் தலைமையொன்று இல்லை. அரசியல் ரீதியில் பலவீனமான நிலையிலிருக்கும் மக்கள் கூட்டமொன்றிற்காக, குரல்கொடுக்க எந்தவொரு வெளித்தரப்பும் முன்வராது.

தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை இன்னும் சிக்கலானது. தமிழர் அரசியலின் மையம் என்று நோக்கப்பட்ட வடக்கில் கூட, தேசிய மக்கள் சக்தியே வெற்றிபெற்றிருக்கின்றது. தென்னிலங்கையைப் பொறுத்தவரையில், அரசியல்ரீதியில் இது ஒரு பிரதான வெற்றியாகும். இந்த நிலையில், சர்வதேச அரங்குகளில் தமிழ் மக்கள் இன்னும் முன்னைய நிலைப்பாட்டில் தான் இருக்கின்றனர் என்னும் அவதானமும் பெருமளவில் மாறுவதற்கான வாய்ப்பே அதிகம். இந்த நிலையில் அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் கட்சிகளின் குரல்கள் பெருமளவிற்கு கேட்கப்படாத ஒன்றாகவே இருக்கப் போகின்றது. முன்னரும் அரசியல் தீர்வு என்னும் விடயம் மேற்குலக ராஜதந்திரிகள் மத்தியில் பெரிதாகப் பொருட்படுத்தப்படவில்லை.

தற்போதுள்ள நிலையில் அரசியல் தீர்வு என்பது அதிகம் தந்திரோபாயம் சார்ந்த ஒன்றாகவே இருக்க வேண்டும். பிராந்திய சக்தியின் தலையீடான, இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒப்பீட்டடிப்படையில் தமிழ் மக்களுக்கு சாதகமான ஒன்று - அதே வேளை அதன் விளைவான பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் இலங்கையின் அரசியலமைப்பு. அதனை முழுமையாக அமுல்படுத்துவதிலிருந்துதான் அதிகாரப் பகிர்விற்கான கோரிக்கையை உயர்த்த முடியும். ஒரு வேளை புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வர அரசாங்கம் முயற்சித்தாலும் கூட, பதின்மூன்றில் இருக்கின்ற விடயங்களை இல்லாமலாக்குவதை தவிர்ப்பதற்கு தமிழர் கோரிக்கை அத்திபாரமாக இருக்கும். ஏனெனில், பதின்மூன்றே அதிகமென்னும் தென்னிலங்கை அரசியல் சூழலில், அதற்கப்பால் அநுர அரசாங்கம் அரசியல் அற்புதங்களை நிகழ்த்தும் - அவ்வாறான அற்புதங்களை நிகழ்த்துவற்கான அழுத்தங்களை வெளித்தரப்புக்கள் வழங்கும் என்று எவரேனும் எண்ணினால் - அவ்வாறான அரசியல்வாதிகள் நல்ல மருத்துவர்களைத்தான் நாட வேண்டும்.


## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024



"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்."
- ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

# வவுனியா தாண்டிக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

## சாந்தசோலை மக்களே அவதானம்



வவுனியா, நவ. 28

வவுனியா தாண்டிக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் இக்குளத்தின் கீழ் உள்ள சாந்தசோலை கிராமமக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள அடைமழை காரணமாக வவுனியா தாண்டிக்குளம் குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. இக்குளத்தின் அணைக்கட்டின் மேலாக நீர் வழிந்தோடுகின்றது

மேலும், குளத்தின் அணைக்கட்டின் பல பகுதிகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன், அதிக நீர்வரத்து காரணமாக பல இடங்களில் அணைக்கட்டு பெருமளவில் அரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குளக்கட்டு உடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

(எ-10)

# வவுனியாவில் பாம்பு கடித்து இளைஞன் மரணம்

வவுனியா, நவ. 28

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் நேற்றுக் காலை பாம்பு கடித்து இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

பட்டிக்குடியிருப்பை சேர்ந்த 20 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார். பாம்பு கடிக்குள்ளான நிலையில், நெடுங்கணி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து வவுனியா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட போதும் மரணமடைந்தார்.

தற்போது சீரற்ற வானிலையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தையடுத்து பாம்பு மற்றும் விஷ ஐந்துகள் நீரில் அகப்பட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகரும் வாய்ப்புள்ளதால் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தினர்.

(எ- 10)

# யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சி!

கொழும்பு, நவ. 28

கடந்த 24 மணி நேரத்தில் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதன்படி, அங்கு 253 மில்லி மீற்றராக பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் முல்லைத்தீவு, துணுக்காய் பகுதியில் 253 மி.மீ. மழை வீழ்ச்சியும், அச்சுவேலி பகுதியில் 245.3 மி.மீ வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

(அ)

# கிளிநொச்சியில் தொடரும் கனமழை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு




கிளிநொச்சி, நவ. 28

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் சீரற்ற வானிலையால் வட்டக்கச்சி, பெரிய குளம் பகுதிகளில் வீதிகளை மூடியவாறு வெள்ளம் தேங்கியுள்ளது.

இதனால் இப்பிரதேசங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

(எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் - 28 வியாழக்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 13
நல்ல நேரம் :10.30-12.00
ராகு காலம் :12.00 - 1.30
திதி : திரையோதசி




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வாகனவசதிப் பெருகும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**இடபம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. அனாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆதரவு கிடைக்கும். வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். விருந்தினரின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் ஆதாயம் உண்டு. வேற்றுமதத்தவர் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி**
சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். மனதில் பட்டதை பளிச்சென்று பேசி மற்றவர்கள் விமர்சனத்திற்கு உள்ளாவீர்கள். இடம் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாகப் பேச வேண்டாம். வியாபாரத்தில் வேலை யாட்களால் பிரச்னைகள் வரக்கூடும்.

**விருச்சிகம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். சாதிக்கும் நாள்.

**தனுசு**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பிரபலங்கள் உதவுவார்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும்.

**மகரம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ் நிலை அறிந்து செயல்படுவார்கள். சுபநிகழ்ச்சி களில் கலந்துக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச் சுமையும் அலைச்சலும் இருக்கும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கி தவிப்பீர்கள். பேச்சில் காரம் வேண்டாம்.

**மீனம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவிவழியில் நல்ல செய்தி உண்டு. கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்.

# ஏ-9 வீதியூடான போக்குவரத்து வவுனியாவில் தடைப்பட்டது


## பல மணி நேரம் தரித்து நின்ற வாகனங்கள்






வவுனியா, நவ. 28
வவுனியாவில் ஏ - 9 வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.
குறிப்பாக வவுனியா நொச்சிமோட்டை மற்றும் சாந்த சோலை ஆகிய பகுதிகளில் ஏ - 9 பிரதான வீதியின் ஊடாக அதிகளவான வெள்ளம் வழிந்தோடுவதனால் பேருந்துகள், கனரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் வீதியோரம் தரித்து நிற்கின்றன. (எ-10)

# அலைகல்லு போட்டகுளம் உடைப்பெடுத்தது



வவுனியா, நவ. 28
வவுனியா அலைகல்லு போட்டகுளம் உடைப்பெடுத்ததால் மாளிகை குளத்துக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விமலரூபன் தெரிவித்துள்ளார்.
இதனால், மாளிகை குளம் உடைப்பெடுக்குமாக இருந்தால் ஆறுமுகத்தான் புதுக் குளம், மாளிகை, சேமமடு கிராம மக்களுக்கு ஆபத்து ஏற்படும். எனவே, அப் பகுதி மக்களை அவதானத்துடன் இருக்குமாறும், கால்நடைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்.
கால்நடைகளை கட்டி வைப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். (எ-10)

# சுண்ணாம்புச்சூளை வீதி வெள்ளத்தில் மூழ்கியது



புதுக்குடியிருப்பு, நவ. 28
கடும் மழை காரணமாக முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, கைவேலி சுண்ணாம்புச்சூளை வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.
இந்த நிலையில் குறித்த பகுதிக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.
சுமார் 1.5 கிலோ மீற்றர் தூரமான சுண்ணாம்புச்சூளை வீதியானது நீண்டகாலமாக புனரமைப்பு இன்றி காணப்படுவதாக அப்பகுதி மக்களால் பாராளுமன்ற உறுப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.
இதனால் பாடசாலை மாணவர்கள், அவசர மருத்துவ சேவையைப் பெறுவதற்காக செல்பவர்கள் என அனைத்து தரப்பினரும் நீண்ட காலமாக பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.
தற்போது பெய்துவரும் கன மழை காரணமாக குறித்த சுண்ணாம்புச்சூளை வீதியானது முற்றாக பயன்படுத்த முடியாதவாறு வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.
எனவே, தாம் எதிர்நோக்கும் நீண்டகாலப் பிரச்னையைக் கருத்தில் கொண்டு சுண்ணாம்புச்சூளை வீதியை புனரமைத்துத் தருமாறு மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.
இந்த நிலையில் குறித்த வீதி புனரமைப்புத் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார். (எ)

# முஸ்லிம் பாடசாலைகளுக்கு இரண்டு நாட்கள் விடுமுறை

வவுனியா, நவ. 28
சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு இரண்டு நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் பீ. ஏ. சரத்சந்திர தெரிவித்துள்ளார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு நேற்றும் இன்று 28 ஆம் திகதியும் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ- 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிகள் வழங்குவோருக்கு பொறிமுறை உருவாக்கம்!

## யாழில் நேற்று நடந்த கூட்டத்தில் தீர்மானம்



யாழ்ப்பாணம், நவ. 28


**யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பெரும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க முன்வருவோருக்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.**

வெள்ள அனர்த்தம் தொடர்பான கலந்துரையாடலானது மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பதில் அரசாங்க அதிபர், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி வழங்க முன்வரும் தனியார் தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் உரிய பிரதேச செயலகங்கள் ஊடாக உதவிப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டதுடன், இதற்காக பிரதேச செயலகத்தில் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் பொறுப்பில் உதவிப் பொருட்கள் உரிய நபருக்கு உரிய நேரத்தில் வழங்கப்படும் என்பதனை பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், மாவட்டச் செயலகத்திலும் இதற்கான தனி அலகு உருவாக்கப்பட்டுள்ளதாகவும், உணவு அல்லது உணவு அல்லாத பொருட்களை வழங்கலாம் எனவும் குறிப்பிட்டதுடன், மாவட்டச் செயலகத்தில் பிரதம கணக்காளர் பொறுப்பாகவிருந்து வழங்கப்பட்ட உதவிப் பொருட்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். வெளிப்படைத் தன்மையுடன் உரிய உதவிப் பொருட்கள் பிரதேச செயலகங்களாலும், மாவட்டச் செயலகத்தாலும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும், அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கியதாக பிரதீபன் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதம கணக்காளர், உதவி மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(எ-05)



# வடமராட்சியில் கடும் காற்றால் வீதியின் குறுக்கே வீழ்ந்த மரங்கள்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம், அல்வாய் வீரபத்திரர் கோவிலடிப் பகுதியில் மரம் ஒன்று வீதியின் குறுக்கே வீழ்ந்ததால் இவ் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீசிய கடும் காற்று காரணமாக 751 வழித்தட பேருந்துகள் பயணம் செய்யும் வீதியிலேயே மரம் வீழ்ந்தது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வல்வெட்டித்துறை கெருடாவிலில் அதிகாலை யில் வீசிய கடும் காற்றால் மரம் ஒன்று வேரோடு சாய்ந்தது. இதனால், மின்சார கம்பிகள் அறுந்து தொங்கி மின்சாரம் தடைப்பட்டது. உடனடியாக விரைந்து செயல்பட்ட மின்சார சபையினர் மின்னிணைப்பை சீர்செய்து வழமைக்கு கொண்டு வந்தனர்.

(எ-02)

# கடும் மழை, வெள்ளத்தால் யாழில் 19,200 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

சீரற்ற வானிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 5 ஆயிரத்து 545 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 200 பேரின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் டி.என். சூரியராஜா தெரிவித்தார்.


தொடர் மழை காரணமாக தாழ்நில பிரதேசங்கள் மற்றும் கரையோர பிரதேசங்களை அண்டி வாழும் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த சீரற்ற காலநிலை காரணமாக 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் அனர்த்த நிலை ஏற்பட்டு பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, நல்லூர், தெல்லிப்பழை, சங்கானை, காரைநகர், கோப்பாய், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், உடுவில், நெடுந்தீவு, கரவெட்டி, வேலணை, மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுகளில் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.(எ)

# வெள்ளக்காடாக மாறிய நல்லூர்!










படங்கள் : ஐ.சிவசாந்தன்

# மன்னாரில் சீரற்ற வானிலையால் இதுவரை 50 ஆயிரம் பேர் பாதிப்பு

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர தலைமையில் விசேட குழு மன்னார் வருகை

மன்னார், நவ. 28

மழை - வெள்ளத்தால் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண வானிலை காரணமாக வடக்கு மாகாணமும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு, மன்னார் மாவட்டமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர தலைமையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாடு செய்த குறித்த அவசர கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் என். வேதநாயகன், இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படை, பொலிஸ் உயர் அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையால் மாவட்டத்தில் இதுவரை 14 ஆயிரத்து 237 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 560 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 25 நலன்புரி நிலையங்களில் சுமார் 2100 நபர்கள் வரை தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் மன்னார் மாவட்டத்தில் இடம்பெயரும் மக்களின் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டது. மேலும், அனர்த்தத்தின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்தம் குறித்தும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர தலைமையில் ஆராயப்பட்டது.

தொடர்ந்தும் மழை பெய்து கொண்டிருக்கின்றமையால் அநுராதபுரம் மற்றும் மல்வத்து ஓயாவில் இருந்தும் கூடுதலான நீர் வந்து கொண்டிருக்கின்றமையால் மக்களின் பாதுகாப்பை பலப்படுத்தி முன்னாயத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர கோரிக்கை விடுத்தார்.

மழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு பற்றி பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 28

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம். சட்டவாக்கத்துறையால் இயற்றப்பட்ட தீர்மானத்தையே ஆணைக்குழு செயற்படுத்துகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் குறித்து பாராளுமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.**

தேர்தல்கள் ஆணைக்குழு காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொதுத்தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் இம்மாதம் 15 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்குள் தாம் போட்டியிட்ட தேர்தல் மாவட்டத்தில் உள்ள தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் தமது பிரசார செலவுகளை குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்தலில் வெற்றிப் பெற்ற மற்றும் வெற்றிப் பெறாத சகல வேட்பாளர்களும் தேர்தல் பிரசார செலவுகளை சமர்ப்பிக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

ஜனாதிபதித் தேர்தலின்போது குறித்த காலப்பகுதிக்குள் செலவு தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்காத தரப்பினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை சிறந்த முறையில் நடத்தி முடித்துள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கான தேவை காணப்படுகிறது.

அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள பின்னணியில் முதற்கட்டமாக காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடத்தி முடித்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கடந்த ஆண்டு நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் வாக்கெடுப்புக்கு 21 நாட்களுக்கு முன்னர் பல்வேறு காரணிகளினால் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படாமல் பிற்போடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம்.

வேட்புமனுக்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் தனித்து தீர்மானம் எடுக்க முடியாது. சட்டவாக்கத்துறையால் இயற்றப்பட்ட தீர்மானத்தையே ஆணைக்குழு செயற்படுத்துகிறது.

ஆகவே உள்ளூராட்சித் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் குறித்து பாராளுமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# பாராளுமன்ற நீர் தடாகத்துக்குள் வீழ்ந்த தேசிய மக்கள் சக்தி எம்.பியின் வாகனம்!



கொழும்பு, நவ. 28

தேசிய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நிஹால் அபேசிங்கவின் கார் நேற்று முன் தினம் மாலை பாராளுமன்ற வளாகத்தில் உள்ள நீர் தடாகத்துக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் வாகனத்தில் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் அபேசிங்கவை மீண்டும் ஏற்றிச் செல்ல சாரதி வந்தபோதே வாகனம் இவ்வாறு தடாகத்துக்குள் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அனர்த்த நிலைமையை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள்

கொழும்பு, நவ. 28

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமைகள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கும் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் 24 மணிநேரமும் செயற்படும் வகையில் பொலிஸ் தலைமையகத்தில் விசேட செயற்பாட்டு பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த விசேட பிரிவினை பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவசரகால சூழ்நிலைகள், இடப்பெயர்வுகள் மற்றும் உதவிகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொலைபேசி இலக்கங்கள்
011-2027148
011-2472757
011 - 2430912
011-2013051

# கலா ஓயாவை அண்மித்து வெள்ள அபாய எச்சரிக்கை

கொழும்பு, நவ. 28

கலா ஓயா பள்ளத்தாக்கின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நீர்ப்பாசன திணைக்களம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, நொச்சியாகம, ராஜாங்கனை, வனாத்தவில்லு, கருவலகஸ் ஏரி ஆகிய பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தாழ் நில மக்கள் இது தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டுமென திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது ராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் 10 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், வினாடிக்கு பத்தாயிரம் கன அடி நீர் கொள்ளளவு கலா ஓயாவுக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

அங்கமுவ நீர்த்தேக்கத்திலும் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், கலா ஓயாவுக்கு வினாடிக்கு 3650 கன அடி நீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலையினால் 17 மாவட்டங்களில் 59,629 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று என்பத்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கலாஓயாவின் வான் கதவுகள் தலா ஒரு அடி திறக்கப்பட்டுள்ளன. பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழையுடனான வானிலை காரணமாக கலா ஓயா 85500 ஏக்கர் அடி நீர் கொள்ளளவை எட்டியுள்ளதுடன் நேற்று காலை 10 மணியளவில் கலாஓயா குளம் நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ளது.

இதனையடுத்து கலாஓயாவின் அவசர வான் கதவுகள் இரண்டையும் 10 அடி வரை திறக்க கலாஓயாவுக்கு பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

# மோசமான வானிலை காரணமாக திருப்பிவிடப்பட்ட 6 விமானங்கள்!

கொழும்பு, நவ. 28

மோசமான காலநிலை காரணமாக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு தரையிறங்கவிருந்த 06 விமானங்கள் திருப்பி விடப்பட்டுள்ளன.

மூன்று விமானங்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டன.

மீதமுள்ள மூன்று விமானங்கள் இந்தியாவின் திருவானந்தபுரம் விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டன. (அ)

# 150 கோடி ரூபா பெறுமதி கொண்ட போதைப்பொருளுடன் 2பேர் கைது!

கொழும்பு, நவ. 28

பாதுக்க, வட்டரெக்க பிரதேசத்தில் மேற்சொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 150 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொறளை மற்றும் தலவத்துகொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 41 மற்றும் 37 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களில் ஒருவரிடமிருந்து 42 கிலோ 890 கிராம் ஐஸ் போதைப்பொருளும் மற்றையவரிடமிருந்து 29 கிலோ 750 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# ஐ.தே.க. தலைமைப்பதவியை சஜித்துக்கு தந்தால் இணைவு!

## கூறுகிறார் ஹர்ஷன ராஜகருண

கொழும்பு, நவ. 28

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட்டால் இணைந்து பயணிப்பது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

இந்தியா சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பில் அவருடன் பேச்சு நடத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

'ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். இரு அணிகளும் இணைந்திருந்த தரப்புகள் தான்.

எம்முடன் ஐக்கிய தேசியக் கட்சி இணையலாம். ஐ.தே.கவின் தலைமைப்பதவி சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட்டாலும் அது பற்றி பரிசீலிக்கமுடியும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் தான் எமது பயணம். ஐதேகவுடன் இணைந்துள்ள ஏனைய தரப்புகளுடன் அல்ல." எனவும் பாராளுமன்ற உறுப்பினர் (அ)

# கொழும்பில் சில இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம்!

கொழும்பு, நவ. 28

களனி ஆற்றின் நீர் மட்ட அதிகரிப்பினால், கொழும்பு உட்பட பல பகுதிகளில் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என நீர்ப்பாசன திணைக்களம் எச்சரித்துள்ளது.

குறித்த பகுதிகளில் அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு சிறிய வெள்ள அபாய எச்சரிக்கை அமுலில் இருக்கும் என நீர்ப்பாசன திணைக்களம் நேற்று தெரிவித்தது.

சீதாவக்க, தொம்பே, ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவை, கொழும்பு மற்றும் வத்தளை பிரதேச செயலர் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால், குடியிருப்பாளர்கள் மற்றும் வாகனச் சாரதிகள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக பொறிமுறை ஊடாகவே தீர்வு வரும்

## அமைச்சர் விஜித ஹேரத்



**கொழும்பு, நவ. 28**
**மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உள்ளக பொறிமுறை ஊடாக இலங்கையால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அமெரிக்கா பாராட்டியுள்ளது. எனவே, உள்ளக பொறிமுறை ஊடாகவே உரிய நடவடிக்கைகள் இடம்பெறும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கடந்த கூட்டத் தொடரின்போது முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை நாம் ஏற்கவில்லை. புதிய அரசாங்கமானது தேசிய பொறிமுறை ஊடாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என தெரியப்படுத்தி இருந்தோம். இதனை நாம் செயலில் உறுதிப்படுத்தி வருகின்றோம்.

எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இன்றி ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எமது அணுகுமுறையை வரவேற்றுள்ளன.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் என்னுடன் தொலைபேசி மூலம் சுமார் 15 நிமிடங்கள் பேச்சு நடத்தினார். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் சாதகமான பிரதிபலிப்பை வெளிப்படுத்தினார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, அடுத்தக்கட்டம் நோக்கி செல்வதற்கு உள்ளக பொறிமுறை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என எமது தரப்பில் அறிவித்தோம். அது தொடர்பில் தற்போது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

வடக்கு மக்கள் எமக்கு ஆதரவளித்துள்ளனர். ஒரு நாட்டில் இலங்கையர்களாக முன்னோக்கி செல்வதற்கு அவர்கள் தயாராக உள்ளனர். இனவாதம் மற்றும் மதவாதத்துக்கு இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதியும் அறிவித்துள்ளார்- என்றார். (அ)

# வெளிநாட்டு முதலீடுகளுக்காக இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு

## ஆசிய அபிவிருத்தி வங்கி கவனம்

கொழும்பு, நவ. 28

அரசாங்கத்தின் முறையான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டு வரும் நிலையில் அந்த முதலீட்டு வாய்ப்புக்களுக்கு உதவிகளை வழங்குவது குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி கவனம் செலுத்தியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ஜீ.என்.ஆர்.டீ. அல்போன்ஸ் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய வலுசக்தி,நவீன விவசாயம் மற்றும் காலநிலை அனர்த்த துறைகளில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

மேற்படி துறைகளில் அரச துறையின் நேரடி முதலீட்டுக்கான வாய்ப்புகள், அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டு முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வலயப் பிரதானி டகியோ கொயிகே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தகபுமி கடோனோ , ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட நிபுணர் சந்தோஷ் பொகரெல், நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சமந்த பண்டார, நிதி அமைச்சின் பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெிரிவ்ததுள்ளது. (அ)

# திகதி மாற்றி விற்கப்படவிருந்த 17,925 கிலோ அரிசி கண்டுபிடிப்பு!

கொழும்பு, நவ. 28

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இரண்டரை வருடங்களுக்கு முன்னர் உற்பத்தித் திகதி பொறிக்கப்பட்டிருந்த 17,925 கிலோ அரிசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித் திகதி மற்றும் அது தொடர்பான தகவல்களை மாற்றியமைத்து, இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்பை சந்தைக்கு விநியோகிப்பதற்கு திட்டமிட்டிருந்ததாக தெரியவருகிறது.

நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளினால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அங்கு, இந்தியாவில் பொதி செய்யப்பட்ட 25 கிலோ அரிசி மூடைகளில் உற்பத்தியாளர் குறிப்பிட்டுள்ள உற்பத்தித் திகதி ஜனவரி 2022 என பொறிக்கப்பட்டுள்ளதோடு, உற்பத்தி செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்துக்குள் பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையில் இருந்து அரிசியை இறக்குமதி செய்த வர்த்தகர், பொதி தயாரிக்கும் திகதியை ஜூன் 2024 என மாற்றி அரிசியை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும், அரிசிப் பொதிகளில் அச்சிடப்பட்ட விலை மற்றும் நிறைகள் என்பன மாற்றப்பட்டு கொழும்பு 14 பகுதியிலுள்ள களஞ்சியசாலையில் இரகசியமாக வைக்கப்பட்டு எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் அரிசியை சந்தைக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப் பின்போது, உற்பத்தித் திகதி மாற்றப்பட்ட 25 கிலோகிராம் அரிசி பொதிகள் 717 நுகர்வோர் விவகார அதிகார சபையினால் கைப்பற்றப்பட்டுள்ளன. விரைவில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நீர்த்தேக்கங்கள் நிரம்பின ஆறுகள் பெருக்கெடுப்பு!

கொழும்பு, நவ. 28

நாட்டின் பல நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதாகவும் பெரும்பாலான ஆறுகள் பெருக்கெடுத்து வருவதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை நிலவரப்படி தெதுரு ஓயா நீர்த்தேக்கத்திற்கு வினாடிக்கு 32 ஆயிரத்து 145 கன அடி நீர் திறந்துவிடப்படுவதாக அதன் பொறியாளர் ஜி.டபிள்யூ.ஏ.சதுரா தில்தாரா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வாரியபொல, நிகவெரட்டிய, மஹவ, கொபேகனே, பிங்கிரிய, பல்லம, ஹலவத்தை, ஆராச்சிக்கட்டுவ, ரஸ்நாயக்கபுர ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட தாழ்நில பகுதிகளில் வசிக்கும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

இதற்கிடையில், ராஜாங்கனை நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 3 ஆயிரத்து 520 கன அடியும், கவுடுல்ல நீர்த்தேக்கத்திற்கு வினாடிக்கு ஆயிரம் கன அடியும் தண்ணீர் திறந்து விடப் படுகிறது.

மேலும், யான் ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரத்து 99 கன அடியும், பராக்கிரம கடலில் இருந்து வினாடிக்கு 5 ஆயிரத்து 46 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதேவேளை, மகாவலி ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களும் வெள்ளத்தில் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக் களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் தளர்த்தியுள்ள மத்திய வங்கி!

கொழும்பு, நவ. 28

இலங்கை மத்திய வங்கியானது நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் தளர்த்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் கொள்கை வீதத்தை 8 வீதமாக பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் இரட்டைக் கொள்கை வட்டி வீத முறைக்குப் பதிலாக ஒற்றைக் கொள்கை வட்டி வீத முறையை நடைமுறைப்படுத்தவும் இதன்போது தீர்மானித்து.

மத்திய வங்கியால் செயல்படுத்தப்படும் நெகிழ்வான பணவீக்க இலக்கு கட்டமைப்பில் இது மற்றொரு முக்கியமான முன்னேற்றமாகும். (அ)

# மூன்று மாவட்டங்களுக்கு 3ஆம் நிலை எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 28

நாட்டின் 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் 3 மாவட்டங்களுக்கு மூன்றாம் நிலை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, பதுளை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவற்றில் கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மூன்றாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# மேல் கொத்மலை நீர்த்தேக்க மூன்று வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, நவ. 28

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் வரை இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் நேற்று அதிகாலை மேலும் ஒரு வான்கதவு திறக்கப்பட்டது.

இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாக காட்சியளிக்கின்றது.

அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்தோடு, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்பட்டது.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காரைதீவில் பெருவெள்ளம் சடலங்கள், வாகனங்கள் மீட்பு









காரைதீவு, நவ. 28

**அம்பாறை மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த இரு மாணவர்களின் சடலங்கள் நேற்றுக்காலை மீட்கப்பட்டன.**

இந்த பேரனர்த்தத்துக்கு காரணமான உழவியந்திரம் மற்றும் அதன் பெட்டி என்பன கனரக வாகனம் மூலம் வெள்ளத்தில் இருந்து மீட்கப்பட்டன. மேலும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற காரைதீவுக்கு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம, மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜி.அருணன், சம் மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். எம்.ஹனிபா ஆகி யோர் உள்ளிட்ட உயரதிகாரி கள் சமுகமளித்திருந்தனர்.

முப்படையினரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

விமானப்படை விமானமும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

காரைதீவு மாவடிப்பள்ளி பிரதான வீதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கிய 8 மத்ரஸா மாணவர்கள் உட்பட 11 பேர் காணாமல் போயிருந்தனர். (எ)

# மழை, வெள்ளத்தால் வயலுக்குள் சிக்கித் தவிக்கும் விவசாயிகள்!

மட்டக்களப்பு, நவ. 28

மட்டக்களப்பு - புல்லுமலை, தம்பட்டி மற்றும் மாவடிஓடை வண்ணாத்தி ஆறு பகுதிகளில் உள்ள வயல்களில் வேளாண்மை நடவடிக்கைக்கு சென்ற 7 விவசாயிகள் அந்தப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் அங்கிருந்து வெளியேறி வீடு திரும்ப முடியாமல் சிக்குண்டுள்ளனர் என்று மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் ரமேஸ் தெரிவித்தார்.

குறித்த பகுதியிலுள்ள வயல்களில் காவலுக்கு சென்ற மற்றும் வேளாண்மை நடவடிக்கைகளுக்காக புல்லுமலை தம்பட்டி வயல் பிரதேசத்தில் 3 விவசாயிகளும் மாவடி ஓடை வண்ணாத்தி ஆறு வயல் பிரதேசத்தில் 4 பேர் உட்பட 7 விவசாயிகள் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் தொடர் கடும் மழை காரணமாக அந்த பகுதியிலுள்ள குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் வீதிகள் பல மூழ்கியதையடுத்து அந்த விவசாயிகள் தமது வாடிகளில் இருந்து வீடுகளுக்கு வர முடியாமல் சிக்குண்டுள்ளனர்.

இவர்களை மீட்பதற்காக கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் உதவியை நாடியுள்ளதாகவும் வெள்ள நீர் அதிகமாக பாய்ந்தோடுவதால் படகில் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் மேகம் இருள் சூழ்ந்து கடும் காற்று வீசுவதால் விமானப்படையின் ஹெலிகொப்டர் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விமானப்படையினர் தெரிவித்தனர். (எ)

# திருமலையில் மழையால் 1708 குடும்பங்கள் பாதிப்பு

திருகோணமலை, நவ. 28

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக நேற்றுக் காலை 08 மணியளவில் கிடைத்த புள்ளி விவரங்களின்படி திருகோணமலை மாவட்டத்தில் 1708 குடும்பங்களைச் சேர்ந்த 4851 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 65 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளதாகவும், 532 குடும்பங்களைச் சேர்ந்த 1621 பேர் உறவினர்களின் வீட்டிலும் தங்கியுள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுந்தாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில், மாவட்டத்தில் 06 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேரும், மூதூர் பிரதேச செயலகத்தில் 938 குடும்பங்களைச் சேர்ந்த 2574 பேரும், தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் 96 குடும்பங்களைச் சேர்ந்த 301 பேரும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நகர் மற்றும் கடவத்தை பிரதேச செயலகப் பிரிவில் 193 குடும்பங்களைச் சேர்ந்த 673 பேரும், கிண்ணியா பிரதேச செயலகத்தில் 403 குடும்பங்களைச் சேர்ந்த 1084 பேரும், குச்சவெளி பிரதேச செயலகத்தில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேரும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# நள்ளிரவில் திடீரென பாலம் தாழிறக்கியது



கல்முனை, நவ. 28

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் நிந்தவூர் மாட்டுப்பளையை அடுத்துள்ள பிரதான வீதியிலுள்ள பாலம் வீதி நள்ளிரவில் திடீரென தாழிறங்கியுள்ளது.

இதனால் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதி போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

இதனால் பயணிகள் மாற்று வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். (எ)

# ஓர் இலட்சத்து 23,876 பேர் அம்பாறையில் பாதிப்பு

கல்முனை, நவ. 28

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக இம்மாவட்டத்தில் இருவர் உயிரிழந்ததுடன், ஐவர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனவர்களை தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக வும், இதுவரை ஓர் இலட்சத்து 23 ஆயிரத்து 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப் பணிப்பாளர் எம். ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன. நேற்றுக்காலை 11 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அம்பாறை மாவட்டத்தின் இங்கினியாகலை பிரதேசத்தில் 240.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளதுடன் [illegible] பிரதேசத்தில் 132.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட வானிலை அவதானிப்பாளர் எம்.ஏ.எம்.அக்மல் தெரிவித்தார்.



அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரண மாக இம்மாவட்டத்தில் பிரதான வீதிகள் சில வெள்ளத் தால் நிரம்பியுள்ளதுடன், பாலமொன்று உடைப் பெடுத்தமையாலும் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. நிந்தவூர் மாட்டுப்பளை பகுதியில் பாலமொன்று உடைப்பெடுத்தமையால் கல்முனை- அக்கரைப்பற்று போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பாறை- கண்டி வீதி, அம்பாறை - கல்முனை பிரதான வீதிகளின் போக்குவரத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளின் நீர் மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளன. தாழ்நிலப் பிரதேசத்தில் வசித்து வந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். உறவினர்களின் வீடுகளுக்கும் பாடசாலைகள், மத நிறுவனங்கள் போன்றவற்றில் பலர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் 34, 885 குடும்பங்களைச் சேர்ந்த ஓர் இலட்சத்து 23 ஆயிரத்து 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 52 நலன்புரி நிலையங்களில் 2082 குடும்பங்களைச் சேர்ந்த 6710 பேர் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரை இம்மாவட்டத்தில் 70 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்ரான் கான் ஆதரவாளர்களின் பேரணியில் வெடித்தது கலவரம்

## போர்க்களமானது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், நவ. 28

**பாகிஸ்தான் சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் இம் ரான் கானை விடுதலை செய்யக்கோரி பஞ்சாப் மாகாணம் ஹசன் அப்தலில் இருந்து அவரது ஆதரவாளர்கள் தலைநகர் இஸ்லாமாபாத்தை நோக்கி பிரம்மாண்ட பேரணி நடத்தினர். இந்தப் பேரணியில் ஏற்பட்ட மோத லில் ஐவர் உயிரிழந்தனர். இதனால் கலவரம் வெடித்தது.**



ஊடகத் தகவலின்படி போராட்டக்காரர்களால் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதிரடிப் படையைச் சேர்ந்த நால்வர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். இந்தப் பேரணியில் பலர் காயமடைந்தனர். மேலும் போராட்டக்காரர்கள் பொலிஸ் வாகனங்களுக்குத் தீ வைத்து எரித்தனர். போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர். இதனால் அப்பகுதி போர்க்களம் போல் காட்சியளித்தது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது ஊழல் வழக்கு உட்பட ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பாகிஸ்தான் தலைவர்களுக்கு வெளிநாட்டுத் தலைவர்கள் வழங்கும் பரிசுகள் எல்லாம் அரசு கருவூலத்துக்கு சென்று விடும். அவ்வாறு வழங்கப்பட்ட விலை உயர்ந்த ஆபரணம் ஒன்றை, இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது அரசு கருவூலத்துக்கு குறைந்த பணம் செலுத்தி முறைகேடான வழியில் எடுத்துக் கொண்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இம்ரான் கானுக்கு பிணை வழங்கியது.

பிணை கிடைத்த சில மணி நேரத்தில் தீவிரவாதம் மற்றும் இதர வழக்குகளில் இம்ரான் கானை ராவல்பிண்டி பொலிஸார் கைது செய்தனர். ராவல் பிண்டியில் உள்ள அடியலா சிறையில் இம்ரான் கான் இருந்தபோது, கடந்த செப் ரெம்பர் 28ஆம் திகதி போராட் டத்துக்கு அழைப்பு விடுத்ததாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் தான் இம்ரான் கான் தற் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

லாகூர், ராவல்பிண்டி மற்றும் இஸ்லாமாபாத் ஆகிய நகரங்களில் உள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களில் இம்ரான் கான் மீது 62 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பஞ்சாப் மாகாணத்தில் அவர் மீது 54 வழக்குகள் உள்ளன. அனைத்து வழக்குகளிலும் இருந்தும் இம்ரான் கானுக்கு பிணை வழங்க வேண்டும் என்று இம்ரான் கானின் சகோதரி நூரின் நியாசி தாக்கல் செய்த மனுவை லாகூர் நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட் டது. இதனால் இம்ரான் கான் இப்போது விடுதலையாவதற் கான வாய்ப்புகள் எதுவும் இல்லை.

இந்த நிலையிலேயே அவரின் விடுதலையை வலியுறுத்தி பிரம்மாண்ட பேரணி நடத் தப்பட் டது. (எ)

# இந்துக்கள் கொந்தளிப்பு



டாக்கா, நவ.28

பங்களாதேஷில் இஸ்கான் பொதுச் செயலாளர் சின்மய் கிருஷ்ணதாஸ் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கை இந்துக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை, இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள இந்தியா, சின்மய் கிருஷ்ணதாஸ் கைது செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷில் இடஒதுக்கீடு நடைமுறையை எதிர்த்து கடந்த ஜூன், ஜூலையில் மாணவர் சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தின. இது பெரும் கலவரமாக வெடித்தது. இதனால், பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். தற்போது அங்கு முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு ஆட்சி நடத்தி வருகிறது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் பங்களாதேஷில் இந்துக்கள் மீது தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நாடு முழுவதும் 69 இந்துக் கோவில்கள் சூறையாடப்பட்டு, சுவாமி சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. இந்துக்கள் மீது 2,010இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்து பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறுபான்மையினர் மீதான வன்முறைகளை கண்டித்து இஸ்கான் அமைப்பின் பொதுச் செயலாளர் சின்மய் கிருஷ்ணதாஸ் பிரம்மாச்சாரி தலைமையில் பங்களாதேஷ் முழுவதும் அமைதி வழியில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த போராட்டங்களில் பங்கேற்ற இந்துக்கள் மீது இராணுவம் மற்றும் பொலிஸார் மிகக் கொடூரமாக தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சூழலில் சின்மய் கிருஷ்ணதாஸ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரை விடுதலை செய்யக் கோரி சிட்டகாங் நீதிமன்றம் முன்பு பெருந்திரளான இந்துக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர்.

பங்களாதேஷில் இந்துக்கள் மற்றும் இதர சிறுபான்மையினர் மீது சமூகவிரோத கும் பல்கள் பல்வேறு தாக்குல்களை நடத்தி வருகின்றன. சிறுபான்மையினரின் வீடுகள் தீ வைத்து எரிக்கப்படுகிறது. அவர்களின் உடைமைகள் சூறையாடப்படுகின்றன. இந்துக் கோவில்கள் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே, பங்களாதேஷில் வாழும் இந்துக்கள், இதர சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகாரத் துறை வலியுறுத்தியுள்ளது. (எ)

# போர் நிறுத்த ஒப்பந்தம் நீடித்த தீர்வாக வேண்டும்

## பிரிட்டன் பிரதமர் வலியுறுத்தல்

லண்டன், நவ. 28

போர் நிறுத்த ஒப்பந்தம் லெபனானில் ஒரு நீடித்த அரசியல் தீர்வாக மாற்றப்பட வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதற்கு அவர் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே நீண்ட காலமாக போர் நீடித்து வரும்நிலையில், இன்று உறுதி செய்யப்பட்டுள்ள போர் நிறுத்தம் ஒப்பந்



தம், லெபனான் மற்றும் வடக்கு இஸ்ரேலின் குடிமக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கும். அவர்கள் கடந்த சில மாதங்களாக அழிவுகரமான மோதல்களின் போது நினைத்துப் பார்க்க முடியாத விளைவுகளை சந்தித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# நிலத்தடி நீரை அதிகம் உறிஞ்சுவதால் பூமி அச்சு 31.5 அங்குலம் சாய்ந்தது

## புவி இயற்பியல் ஆய்வில் தகவல்

சியோல், நவ. 28

நிலத்தடி நீரை அதிகம் உறிஞ்சுவதால் பூமி அச்சு 31.5 அங்குலம் சாய்ந்துள்ளது என்று புவி இயற்பியல் ஆய்வின்படி தகவல் வெளியாகியுள்ளது.

தென் கொரியா தலைநகர் சியோலில் உள்ள சியோல் தேசிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கி-வியா சியோ தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் கடந்த 1993ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை புவி இயற்பியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

இதன்படி, நிலத்தடி நீர் குறைவு காரணமாக, பூமியின் துருவம் சுமார் 80 சென்ரி மீற்றர் கிழக்கு நோக்கி நகர்ந்துள்ளது. ஆராய்ச்சி மேற்கொண்ட காலத்தில் பூமியிலிருந்து 2,150 ஜிகாடன்கள் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டுள்ளது. பூமியிலிருந்து நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்டதால், கடல் மட்டமும் 0.24 அங்குலம் உயர்ந்து, பூமியின் நிறை விநியோகத்தில் மாற்றம் ஏற்பட்டு அதன் சுழற்சி அச்சு ஆண்டுக்கு 4.36 சென்ரி மீற்றர் சாய்வதற்கு வழிவகுக்கிறது. தற்போது அது 31.5 அங்குலம் சாய்ந்துள்ளது. நிலத்தடி நீர், கடலுக்கு மீண்டும் செல்வது, துருவ இயக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

பூமியின் அச்சில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தால், வானிலையில் உடனடி பாதிப்பு ஏற்படப் போவதில்லை. ஆனால், தொடர்ச்சியாக நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டால் நீண்டகால பாதிப்பு ஏற்படலாம்.

பூமியின் துருவ இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், பருவநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதனால், நீடித்த நீர் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# சீன உற்பத்தி பொருட்களின் இறக்குமதிக்கு கூடுதல் வரி

வாஷிங்டன், நவ. 28

சீனா, கனடா, மெக்சிக்கோ நாட்டிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக வரி விதிக்க அமெரிக்காவில் புதிதாக தெரிவாகியுள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ட்ரம்ப் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக ஜனவரி மாதம் 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

இந்த நிலையில், மெக்சிக்கோ மற்றும் கனடா நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு தலா 25 சதவீதமும், சீனாவின் இறக்குமதிக்கு 10 சதவீதமும் கூடுதல் வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ட்ரம்ப் தனது தேர்தல் பிரசாரங்களில், அமெரிக்கா உடன் இந்தியா மிகப் பெரிய வர்த்தக துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டிய நிலையில் இந்த வரி விதிப்பு குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

இதன் மூலம், உற்பத்தி துறைக்கான வேலைவாய்ப்புகளை மீண்டும் அமெரிக்காவுக்கே திரும்ப கொண்டு வரவும், வர்த்தக பேரங்களை அதிகரிக்கவும் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதகமான விதத்தில் இடம்பெறும் ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள்!

## கத்தோலிக்க ஆயர் பேரவை வரவேற்பு

**கொழும்பு, நவ. 28**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகள் சாதகமான விதத்தில் இடம்பெறுவதாக தெரிவித்துள்ள கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, எஞ்சியுள்ள பணிகள் விரைவில் முடிவடையும் என நம்பிக்கை வெளியிட் டுள்ளது.**

சி.ஐ.டியினர் முன்னெடுக்கும் விசாரணைகளில் சில சாதகத் தன்மைகளை அவதானித்துள்ளதாக கத்தோலிக்க ஆயர்பேரவையின் பேச்சாளர் ஜூட் கிறிசாந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ- விக்கிரமசிங்க அரசாங்கங்கள் அலட்சியம் செய்த சில விடயங்கள் குறித்து சி.ஐ.டியினர் தற்போது கவனம் செலுத்துகின்றனர் என தெரிவித்துள்ள அவர், உதாரணத்துக்கு சனல் 4 ஆவணப்படத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட தனிநபர்களை தற்போது விசாரணைக்கு அழைக்கின்றனர். அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்கின்றனர் என தெரிவித்தார்.

இதனையே நாங்கள் எதிர்பார்த்தோம்,இதேயளவு அர்ப்பணிப்புடன் இந்த நடவடிக்கைகள் தொடரும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதை நாங்கள் விரும்பவில்லை. குண்டுத் தாக்குதலை திட்டமிட்டவர்கள் அனைவருக்கும் எதிராகவும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கத்தோலிக்க ஆயர் பேரவையின் கூறினார்.

விக்கிரமசிங்க குழுக்களை அமைத்து அறிக்கைகளை கோரினார் என தெரிவித்துள்ள அவர், அறிக்கைகளை மாத்திரம் கோருவதில் அர்த்தமில்லை. கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்று நாங்கள் முன்னேற்றகரமான விடயங்களை காண்கின்றோம். விசாரணைகளை இரகசியமாக முன்னெடுத்த பின்னர் எங்களுக்கு அறிவிப்பதை விட அரசாங்கம் அனைத்தையும் வெளிப்படையான விதத்தில் செய்யவேண்டும். விசாரணை முடிவுகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும் எனவும் கூறினார். (அ)

# அர்ஜுன் அலோசியஸ் மீது மற்றுமொரு வழக்கு தாக்கல்

கொழும்பு, நவ. 28

வரி ஏய்ப்பு குற்றச்சாட்டில் 6 மாத சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள டபிள்யூ.எம்.மெண்டிஸ் அன்ட் கம்பனியின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸுக்கு எதிராக மற்றுமொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செய்தித்தாள் அச்சிடுவதற்கான காகிதங்களை வாங்கியதன் மூலம் 12 மில்லியன் ரூபாவை மோசடி செய்ததாக கூறி, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செய்தித்தாள்களை அச்சிடுவதற்கான காகிதத்தை இறக்குமதி செய்து விநியோகம் செய்யும், நெப்டியூன் பேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் தாக்கல் செய்த இந்த வழக்கில், அர்ஜுன் அலோசியஸ் மற்றும் சமிந்த சஹான் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரதிவாதிகளின் வங்கிக் கணக்குகளில் போதிய பணம் இல்லாதபோதும், 2019 ஆம் ஆண்டில் தனித்தனி சந்தர்ப்பங்களில் நான்கு காசோலைகளை வழங்கியதன் மூலம் 12 மில்லியன் ரூபாய் மோசடி செய்யப்பட்டதாக தெரிவித்தே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்சன கெக்குனுவல முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது, அர்ஜுன் அலோசியஸ் சிறைச்சாலை நிர்வாகத்தினால், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், இரண்டாவது பிரதிவாதி நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

இந்தநிலையில் இரண்டு தரப்பினரும் முன்வைத்த வாதப் பிரதிவாதங்களை பரிசீலித்த நீதவான், பிரதிவாதிக்கு 8 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையை வழங்கினார்.

அத்துடன், நீதிமன்றத்தில் முன்னிலையாகாத இரண்டாவது பிரதிவாதியை மார்ச் 19ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. (அ)

# வரிப் பணத்தை விரயமாக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 28

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களின் வரிப் பணத்தை விரயமாக்குவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கடந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை விடவும் தற்போதைய அரசாங்கம், மக்கள் பணத்தை விரயமாக்குவதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயங்களை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உணவுப் பார்சல்களை வீட்டிலிருந்து கொண்டு வந்து உண்பதாக தேர்தல் மேடைகளில் பேசியவாகள், பாராளுமன்ற உணவகத்தை ஆக்கிரமித்து உணவு பற்றாக்குறையை எற்படுத்தினார்கள்.

தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உணவு விநியோகம் செய்ய முடியாது பணியாளர்கள் திண்டாடினர்-என்றார். (அ)

# சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் கைப்பை திருட்டு

## யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் கைது

கொழும்பு, நவ. 28

லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்திலிருந்த அலுவலக உதவியாளர் ஒருவரின் கைப்பையை திருடிய கணக்காளர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கனடாவில் கணக்காளராகக் கடமையாற்றும் யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடையவர் ஆவார்.

14 இலட்சத்து' 23 ஆயிரம் ரூபா பெறுமதியான 2,700 பவுண் நகைகள் மற்றும் 04 கையடக்கத் தொலைபேசிகள் அடங்கிய கைப்பையே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றும் கொழும்பு பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவர் லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது தனது கைப்பை திருடப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர் இது தொடர்பில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையின் அதிகாரிகளிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து விமான சேவையின் அதிகாரிகள் இது தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பின்னர் இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததையடுத்து விமான நிலையப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட கைப்பையில் இருந்த பொருட்கள் விமான நிலைய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (அ)

# கன மழை, வெள்ளம் காரணமாக பெருந்தோட்ட மக்களும் பாதிப்பு

கொழும்பு, நவ. 28

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழையுடன் தாழ்நிலைப் பிரதேசங்களில் அண்டி வாழும் மக்கள் வெள்ள நீரில் மூழ்கியதால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, மழையுடன் கடும் குளிரும் நிலவுகின்றதால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் நுவரெலியா மாநாகரசபை எல்லைக்குட்பட்ட பம்பரகலை தோட்டத்தில் பெருந்தோட்டங்களுக்கு வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லும் வீதிகளில் நீர் நிரம்பி செல்வதனால் நடந்த செல்ல முடியாமல் தாம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்தனர்.

மேலும், நுவரெலியாவில் இடைவிடாது பெய்யும் கடும் மழை காரணமாக பம்பரகலை தோட்டத்தில் பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 193 குடும்பங்களை சேர்ந்த 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 98 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதால் அங்கு வசித்து வரும் 50 குடும்பங்களைச் சேர்ந்த 207 பேர் மூன்று தற்காலிக இடைதங்கல் முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார். (அ)

# குளவி கொட்டுக்கு இலக்காகி 18 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, நவ. 28

களுத்துறை பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி 18 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குளவி கொட்டுக்கு இலக்காகியவர்களில் மூன்று பெண்கள் உட்பட எட்டு பேர் அகலவத்தை பிம்புர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 10 பேர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அகலவத்தை பிம்புர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் சிகிச்சை பெற்று மீண்டும் வீடு திரும்பியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

களுத்துறை பிரதேசத்தில் உள்ள மரம் ஒன்றில் இருந்த குளவிக் கூடு ஒன்று கலைந்ததால் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளது.(அ)

# 26 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, நவ. 28

இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் 26 பேர் நேற்று முன் தினம் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு கிருலப்பனை பிரதேசத்தில் உள்ள தற்காலிக விடுதியில் தங்கியிருந்த நிலையில் குறித்த வெளிநாட்டவர்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் பங்களாதேஷ் பிரஜைகள் 16 பேரும், பாகிஸ்தான் பிரஜைகள் இரண்டு பேரும், புருண்டி பிரஜைகள் 02 பேரும், இந்தியா, பிலிப்பைன்ஸ், உகண்டா, எத்தியோப்பியா, கென்யா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒவ்வொருவரும் உள்ளடங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடியில்...

அம்மன் ஆலயத்திலேயே இந்த கொள்ளை சம்பவம் நேற்று முற்பகலில் இடம்பெற்றுள்ளது.

பூசகரின் அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் விரைந்தபோது இரண்டு கொள்ளையர்கள் பூசகர் அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியையும், 45 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையருக்கு உதவிய பெண் ஒருவர் இதன்போது பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை இன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத் தவுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை தப்பிச் சென்ற இரு கொள்ளையர்களையும் கைது செய்யும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(அ)

## நிறைவேற்று...

ஆனால் நிச்சயம் மாற்றப்படும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம்." - எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (அ)

## உயர்தர...

தேவையான நிபந்தனைகளை அமைத்து அதன் பின்னர் மீண்டும் உயர்தர பரீட்சையை ஆரம்பிக்க நட வடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

எவ்வாறாயினும், மோசமான வானிலை காரணமாக க.பொ.த உயர் தரப் பரீட்சையை 3 நாட்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நேற்றுமுன்தினம் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று, இன்று மற்றும் நாளை ஆகிய மூன்று நாள் உயர்தரப் பரீட்சை நடைபெறாது என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொட்டும் மழைக்கு...

மாவீரர் துயிலுமில்லம், தேராவில் மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் நினைவேந்தல் மிகவும் உணர் வெழுச்சியுடன் இடம்பெற்றன.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு கடற்கரை, இரட்டைவாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அளம்பில், வன்னி விளான்குளம், முள்ளியவளை, ஆலங் குளம், இரணைப்பாலை, முள்ளி வாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற் றன.

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சன், முள்ளிக்குளம் துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, தாண்டியடி, வாகரை கண்டலடி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்திலும், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் இடம்பெற்றது.

**யாழ்ப்பாணம் - கோப்பாய்**

யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக ,மாவீரர் நாளான இன்றைய தினம் உணர் வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில், நினைவேந்தல் இடம்பெற்றது.

**கொடிகாமம்**

யாழ்ப்பாணம் - கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டன. மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் பொதுச்சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், சகோதரர்கள்,உறவுகள்,சமூக ஆர்வலர்கள்,அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளான வர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

**எள்ளங்குளம்**
**மாவீரர் துயிலும் இல்லம்**

யாழ்ப்பாணம் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக ,மாவீரர் நாளான இன்றைய தினம் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

**சாட்டி மாவீரர் துயிலும் இல்லம்**

யாழ்ப்பாணம் - தீவகம், சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்திப்பட்டது.

தொடர்ந்து பொது ஈகச்சுடர் முன்னாள் போராளியும், இரண்டு மாவீரர்களின் தந்தையால் ஏற்றப்பட்டது.

**முல்லைத்தீவு**
**இரட்டைவாய்க்கால்**

இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தந்தை ஏற்றி வைக்க ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

**வவுனியா ஈச்சங்குளம்**
**மாவீரர் துயிலும் இல்லம்**

வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங் குளம் பகுதியில் 561 ஆவது இராணுவ தலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நினைவேந்தல்கள் இடம்பெற்றது.

நினைவேந்தலில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற் றோர்களால் சுடர் ஏற்றி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு மாவடிமுன்மாரி**

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலைப் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் திங்கட்கிழமை மாலை 6.05 மணிக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத் தாது ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

**மட்டக்களப்பு - வாகரை**

மட்டக்களப்பு வாகரையில் உணர் வெழுச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

**மன்னார் - பண்டிவிரிச்சான்**
**மாவீரர் துயிலுமில்லம்**

மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒன்று திரண்ட மக்கள் சுடரேற்றி உணர்வுபூர்வமாக தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பொதுச் சுடர் ஏற்றப்பட்ட பின் மாவீரர்களின் உறவுகள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்

**ஆட்காட்டிவெளி**

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு,மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வு பூர்வமாக மாவீரர் நினைவு தினம் நேற்று மாலை நினைவு கூரப்பட்டது. (அ)

## யாழில் மழைவெள்ளத்தால்...

793பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தினால் இதுவரை 1303 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 14 வீடு களும் பகுதியளவில் சேதம் அடைந்துள் ளன. 11 பாதுகாப்பு இடங்களில் 205 குடும்பங்களைச் சேர்ந்த 728பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் 464 குடும்பங்களை சேர்ந்த 1462 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 829 குடும்பங்களை சேர்ந்த 2904 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகள் முழுமையாகவும், 61 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. மூன்று பாதுகாப்பு இடங்களில் 396 குடும்பங்களைச் சேர்ந்த 1470பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடி மின்னல் தாக்கத்தால் 1090 குடும்பங்களைச் சேர்ந்த 3574பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 1359 குடும்பங்களை சேர்ந்த 4234 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 பாதுகாப்பு இடங்களில் 83 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 2164 குடும்பங்களை சேர்ந்த 7187 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு முழுமையாகவும், ஆறு வீடுகள் பகுதிய ளவிலும் சேதம் அடைந்துள்ளன.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 215 குடும்பங்களை சேர்ந்த 764 பேர் வெள்ள அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் சிறு வர்த்தக நிலையம் ஒன்றும் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 901 குடும்பங்களை சேர்ந்த 3171 பேர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 6 பாதுகாப்பு இடங்களில் 368 குடும்பங்களைச் சேர்ந்த 1333 பேர் தங்க வைக்கப்பட் டுள்ளனர். அடிப்படை கட்டமைப்பு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந் துள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 1240 குடும்பங்களை சேர்ந்த 4023 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 7 வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 1618 குடும்பங்களை சேர்ந்த 6020 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அத்துடன் 8 பாதுகாப்பு இடங்களில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 490பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 311 குடும்பங்களைச் சேர்ந்த 1113பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 வீடுகள் பகுதியளவிலும், சேதமடைந்துள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 339 குடும்பங்களைச் சேர்ந்த 1013பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு சிறு வணிக நிலையமும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. வேலணை பிரதேச செயலர் பிரிவில் 545 குடும்பங்களை சேர்ந்த 1866 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 8 பாதுகாப்பு இடங்களில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 57பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 286 குடும்பங்களைச் சேர்ந்த 967பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 306 குடும்பங்களைச் சேர்ந்த 909 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 3 பாதுகாப்பு இடங்க ளில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ)

## மக்களுக்கு...

அதற்காக கீழ் மட்டத்திலிருந்து வலுவான பொறிமுறையொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைத்து தேவையான உணவு மற்றும் மலசலகூட வசதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் அந்த மக்களுக்கு உதவி வழங்கத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அதிகாரிகளுக்கு அறிவித்ததுடன் அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார். (அ)

## பொருளாதார...

ஆதரவு திட்டத்துடன் ஒத்துப்போவதாகவும், இது கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கும் மற்றும் பொருளாதார மீட்சியை ஊக்குவிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் சீர்திருத்த முயற்சிகள் வெற்றியடைவதை உறுதிப்படுத்த சர்வதேச நிதி நிறுவனங்கள், உத்தியோக பூர்வ கடன் வழங்குநர்கள் மற்றும் பத்திரப்பதிவுதாரர்கள் ஆதரவை இலங்கை தொடர வேண்டும். நிலையான வளர்ச்சி மற்றும் கடன் நிலைத்தன்மையை அடைவதில் நாட்டிற்கு உதவ நாணய நிதியம் உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## யாழ்.பல்கலை...

மேஜர் விநோதரனின் (பாலசுந்தரம் அஜந்தன்) தாயார் திருமதி பாலசுந்தரம் பொதுச்சுடரை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் ஈகச் சுடர்களை ஏற்றி, மலர் தூவி உணர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தினர்.

இதில் மாவீரர்களின் உறவுகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு நினைவேந்தலில் ஈடுபட்டனர். (அ-05)

## கஜேந்திர...

துயிலும் இல்லத்தில் நேற்று மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றது.

நேற்று இம்மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. நேற்று மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர் களுக்கான பொதுச் சுடர் ஏற்றி நினை வேந்தல் மேற கொள்ளப்பட்டது. அத்து டன் மாவீரர் நினைவேந்தலை அனுஷ் டிக்க அனுர அரசு இடமளிக்கும் என்று நம்பிக்கையுடன் அங்கு சென்ற மக்களி டம் பொலிஸார் பாதுகாப்புக் கெடுபிடிகளை விதித்து அங்கு செல்வதை தடுக்க முயற்பட்டுள்ளனர். அத்துடன் அங்கு சென்ற வாகனங்களின் இலக்கங்கள் பொலிஸாரினால் பதியப்பட்ட பின்னர் குறித்த மாவீரர் துயிலும் இல்லத்துக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பொலிஸார் முரண்பட்டதுடன் அங்கு பதற்ற நிலையும் ஏற்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மரக்கறி விலை யாழில் உயர்வு

யாழ்ப்பாணம், நவ. 25

கடந்த சில வாரங்களாக நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக யாழ். குடாநாட்டில் பெய்துவரும் மழையால் மரக்கறிப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் யாழிலும் மரக்கறிகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறிவகைகளின் விலை விவரம் வருமாறு-

கத்தரிக்காய் கிலோ 200 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 400 ரூபாவாகவும், பாவற்காய் கிலோ 400 ரூபாவாகவும், தக்காளிப் பழம் கிலோ 350 ரூபாவாகவும், மரவள்ளிக்கிழங்கு கிலோ 250 ரூபாவாகவும், கீரை ஒரு பிடி 150 ரூபாவாகவும், முருங்கைக்காய் கிலோ 1000 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது. (அ)

## முல்லைத்தீவு கடல் கடும் கொந்தளிப்பு!

முல்லைத்தீவு, நவ. 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடல் என்றுமில்லாதவாறு கொந்தளிப்பு நிலைமையுடன் காணப்படுகின்றது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் கிழக்கில் இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது புயலாக மாறி வடக்கை நோக்கி நகர்கிறது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொக்கணை, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு கடல்பரப்புகள் என்றுமில்லாதவாறு கடும் கொந்தளிப்பாக காணப்படுகின்றன.

இந்நிலையில் கடற்கரை பகுதிகளில் உள்ள மீனவர்கள் தொழிலுக்கு செல்லாமல் பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வட்டுவாகல் பாலத்தில் மீண்டும் குறுக்கறுத்துப் பாயும் வெள்ளம்!

### பயணிகள் அவதானம்

முல்லைத்தீவு, நவ. 28

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் ஆங்காங்கே நீர் குறுக்கறுத்துச் செல்வதால் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியம் அதிகமாக உள்ளன.

முல்லைத்தீவு - பரந்தன் ஏ35 வீதியில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் தொடர்ச்சியான மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கி வெளியே தெரியாதபடி காணப்பட்டதால் வட்டுவாகல், சாலை முகத்துவாரங்கள் வெட்டி விடப்பட்டு வெள்ள நீர் வடிந்திருந்தது.

இந்நிலையில், மீண்டும் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக வட்டுவாகல் பாலத்தில் ஆங்காங்கே நீர் குறுக்கறுத்து பாய்ந்த வண்ணம் இருக்கிறது.

இதனால் இப்பாலத்தின் ஊடாக பொதுமக்கள் அவதானமாக பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

## அதிகாரிகளின் விடுமுறை ரத்து!

கொழும்பு, நவ. 28

நிலவும் கடும் மழையுடனான வானிலை காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என விவசாய, கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதன்படி, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தமது பணியிடங்களில் இருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது விடுமுறை கோரியுள்ள அதிகாரிகளின் விடுமுறை இரத்துச் செய்யப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பதவியேற்பு விழாவை நடத்தாமல் 20 கோடி ரூபாயை சேமித்த அநுர!

### பிரதி அமைச்சர் ரத்ன கமகே தகவல்



கொழும்பு, நவ. 28

**ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் சத்தியப் பிரமாணத்துக்கு பயன்படுத்தப்படாத 20 கோடி ரூபா பணம் மக்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வள பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.**

காலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்ட போது சுமார் 200 மில்லியன் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேலும், தமது அரசாங்கத்தின் அமைச்சர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தும் இனி மக்களின் கணக்கில் வரவு வைக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது மன்னார் வைத்தியர்கள் போராட்டம்

மன்னார், நவ. 28

மன்னார் மாவட்ட வைத்திய சாலை வைத்தியர்களால் முன்னெடுக்கப்படவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வைத்தியசாலையில் பணிபுரிவோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் , மன்னார் வைத்தியசாலையில் இடம்பெற்ற அசம்பாவிதத்திற்கும் நடவடிக்கை இது வரையில் எடுக்கப்படாத சூழலில் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்திருந்தனர்.

அந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தால், மக்கள் பாதிப்படைந்துள்ள நிலையில் வீடிழந்து , உதவிகள் இன்றி தவித்து நிற்கும் மக்களை வஞ்சிக்கும் எண்ணம் இல்லை என கூறி, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தமது தொழிற் சங்க நடவடிக்கையை தாற்காலிகமாக இடை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

அத்துடன், ஒரு சில குழுக்களால் முன்னெடுக்கப்பட்ட குழப்ப நிலைமை தொடர்பில் மேல்மட்ட நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# மன்னாரில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கவேண்டும்

### ஜனாதிபதி அநுரவுக்கு செல்வம் எம்.பி. கடிதம்

மன்னார், நவ. 28

மன்னார் மாவட்டத்தில், முள்ளிக்குளம், தலைமன்னார் பியர் பள்ளிமுனை, வங்காலை ஆகிய கிராமங்களில், கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு அவர் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

முள்ளிக்குளத்தில் உள்ள மக்களின் விளை நிலங்கள் மற்றும் குடியிருப்புக் காணிகள், தலைமன்னார் பியரில் உள்ள தேவாலய காணிகள், வங்காலை நானாட்டான் வீதியின் ஓரத்தில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பள்ளிமுனையில் உள்ள குடியிருப்புக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# இனவாதப் பிரச்னைகள் நாட்டில் தலைதூக்குவதாக தகவலில்லை!

### சபாநாயகர் அசோக ரன்வல

கொழும்பு, நவ. 28

நாட்டில் இனவாத பிரச்னைகள் மீண்டும் தலைதூக்குவதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டாலும் அவ் வாறான எந்த விடயமும் நடைமுறையில் இடம் பெற்றதாக தகவல் இல்லை. அவ்வாறான சம்பவம் உண்மையாக இடம்பெறுமாக இருந்தால் அதனை இல்லாமல் செய்வதற்கு பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கும் என சபாநாயகர் அசோக ரன்வல தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் இனவாத பிரச்னைகள் மீண்டும் தலைதூக்குவதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டாலும் அவ்வாறான எந்த விடயமும் நிஜத்தில் காணக் கூடியதாக இல்லை.

உண்மையாக அவ்வாறான சம்பவம் இடம்பெறுமாக இருந்தால் பாராளுமன்றத்தில் அது தொடர்பில் கலந்துரையாடி, அதனை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று வடக்கில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுவது தொடர்பில் எந்த கருத்தாடலும் நாட்டுக்குள் இருப்பதாக தெரியவில்லை.

சாதாரணமாக இடம் பெறும் நிகழ்வே இடம்பெறுவதாக எமக்கு தகவல் கிடைத் திருக்கிறது. கடந்த காலங்களில் மேற்கொண்டது போன்று மீண்டும் செயற்படுவார்கள் என நாங்கள் நினைக்கவில்லை.

வடக்கு மக்கள் தொடர்பில் எங்களுக்கு உண்மையான நம்பிக்கை இருக்கிறது. அவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பது, தங்களின் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக இந்த நாட்டை மீள கட்டியெழுப்புவதாகும்.

அத்துடன் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், பாராளுமன்றத்தில் முதல்நாள் அமர்வின்போது செயற்பட்ட விதம் தொடர்பில், அவர் தனது கவலையை தெரிவித்திருந்தார்.

அவர் ஒரு புதிய உறுப்பினர் என்றவகையில், தவறுதலாகவே எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்ததாகவும் வேண்டுமென்று அவ்வாறு செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்த சம்பவம் தொர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் மிகவும் முன்மாதிரியாக நடந்துகொண்டு, அவரின் பெருந்தன்மையை வெளிப்படுத்தி இருந்தார்.

இதனையே நாங்கள் பாராளுமன்றத்தில் எதிர்பார்க்கிறோம். அதனால் இந்த சிறிய விடயத்தை பெரிதாக்கி, இதனை நாட்டின் பிரதான பிரச்சினையாக்க நாங்கள் முற்படக்கூடாது. அர்ச்சுனா எம்.பி தன்னால் ஏற்பட்ட தவறை உணர்ந்து, அதற்காக பகிரங்கமாக தனது கவலையை வெளிப்படுத்தியதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org